# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 2-ஆவது மெட்ரோ ரயில் சென்னை வந்தது



சென்னைக்கு கொண்டுவரப்பட்ட 2-ஆவது மெட்ரோ ரயில்.

**சென்னை, மார்ச் 12:** ஆந்திர மாநிலம் தடாவில் தயாரிக்கப்பட்ட 2-ஆவது மெட்ரோ ரயில் பெட்டிகள் கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலைய பணிமனைக்கு செவ்வாய்க்கிழமை அதிகாலை வந்தடைந்தது.

சென்னை மெட்ரோ ரயிலுக்காக மொத்தம் 4 பெட்டிகளைக் கொண்ட 42 ரயில்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக பிரேசில் நாட்டைச் சேர்ந்த அல்ஸ்டாம் என்ற தனியார் நிறுவனத்தில் மெட்ரோ ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை பிரேசில் நாட்டில் இருந்து 5 மெட்ரோ ரயில்கள் சென்னைக்கு கப்பல் மூலம் வந்துள்ளன. இன்னும் 4 ரயில்கள் ஜூலை மாதத்துக்குள் சென்னை வரவுள்ளன.

பிரேசில் நாட்டு நிறுவனம் ஆந்திர மாநிலம் தடா அருகே உள்ள ஸ்ரீசிட்டியில் மெட்ரோ ரயில் பெட்டி தயாரிக்கும் பணிக்காக தனது கிளை நிறுவனத்தை நிறுவி, அங்கு மெட்ரோ ரயில்களை தயாரிக்கத் தொடங்கியுள்ளது.

இதையடுத்து, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் மெட்ரோ ரயில் பெட்டி கடந்த மாதம் தயாரிக்கப்பட்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதற்கிடையே, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2-ஆவது மெட்ரோ ரயில் பெட்டிகள் ஆந்திரம் மாநிலம் தடாவில் இருந்து லாரி மூலம் திங்கள்கிழமை (மார்ச் 10) அனுப்பி வைக்கப்பட்டன. இந்த ரயில் பெட்டிகள் செவ்வாய்க்கிழமை காலை சென்னை கோயம்பேடு பணிமனைக்கு கொண்டு வரப்பட்டன.

இந்த ரயில்கள், விரைவில் பணிமனையில் உள்ள சோதனை ஓட்டத் தண்டவாளத்தில் இயக்கிப் பார்க்கப்படும்.

ஒரு பெட்டியைத் தயாரிக்க சுமார் ரூ.9 கோடி செலவாகிறது. ஒட்டு மொத்தமாக பெட்டிகள் தயாரிப்புக்கு ரூ.1,471 கோடியே 39 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் தடா ஸ்ரீசிட்டியில் இருந்து மேலும் 31 ரயில்களுக்கான 124 பெட்டிகள் தயாரிக்கப்பட்டு இந்தாண்டு இறுதிக்குள் வழங்கப்படவுள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.